பூண்டிமாதா சர்ச்சில் பிரார்த்தனை

திருக்காட்டுப்பள்ளி, நவ. 22–

திருக்காட்டுப்பள்ளி அருகே பூண்டி மாதா சர்ச்சை கட்டிய மறைந்த பங்குதந்தை லூார்து சேவியர் கல்லறை சர்ச்சிலேயே அமைக்கப்பட்டுள்ளது. அவரின் புனிதமிக்க வாழ்வை சிறப்பிக்கும் வித மாகவும், புனிதர் பட்டம் கிடைக்க வேண்டியும் மாதம் தோறும் மூன்றாவது சனிக்கிழமை காலை 11:15 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டு சிறப் பிக்கப்படுகிறது. அதன் இறுதியில் அவரின் ஜெப உதவியால், பயன்பெற்றவர்கள், அவர் வழியாக மாதாவிடமிருந்து கிடைத்த இறையாசியால் பலன் பெற்றவர்களின் சாட்சியம் அளிக்கப்பட்டு நன்றி கூறும் விதமாக இறைவழிபாடுகள் முன்னேடுக்கப் படுகிறது.நேற்று மாதத்தின் மூன்றாவது சனிக்கி முமை அன்று ஆன்மீக குரு ஜோசப் தலைமையில் சர்ச் அதிபர் சாம்சன், துணை அதிபர் ரூபன் அந் தோணி ராஜ் மற்றும் அருள்தந்தைகள் கலந்து கொண்டு சிறப்பு திருப்பலி மேற்கொண்டு அவரது அருட்தொண்டுகள் குறித்து பக்தர்களுக்கு தெரி விக்கப்பட்டது.



பூண்டி மாதா சர்ச்சில் உள்ள மறைந்த பங்குத்தந்தை லூார்து சேவியர் கல்லறையில் சிறப்பு ஜெபம் நடந்தது.

தடுப்புக்காவலில் வாலிபர் கைது

பட்டுக்கோட்டை, நவ. 22–

பட்டுக்கோட்டை வட்டம் கழுக புலி காடு அலிவலம் கீழத்தெருவை சேர்ந்த ராயப்பன் என்பவர் மகன் வியாகுல ஜேம்ஸ்(35). இவரை எஸ்பி சுந்தரவதனம் பரிந்துரையின் பேரில் பட்டுக்கோட்டை நகர காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மாரிமுத்து என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட ஆணை உறுதி ஆவணம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் கலெக்டர் ரேவதி உத்தரவில் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் திருச்சி மத்திய சிறையில் வியாகுலஜேம்ஸ் அடைக்கப்பட்டார்.

வணிக கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு

தஞ்சாவூர், நவ. 22–

தஞ்சை மாநகராட்சிக்குட்பட்ட பகு திகளில் உள்ள வணிகக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு முறை யாக அமைக்கப்பட்டுள்ளதா? என்று மாநகராட்சி ஆணையர் தீபனாவிஸ்வேஸ்வரி மற்றும் மேயர் (பொ)அஞ்சுகம் ஆகியோர் ஆய்வு செய் தனர்.

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட்டிருந்த வணிகக் கட்ட டங்களில் அதை உறுதிப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. மேலும் அக்கடைகளில் பணியாளர்களிடம் மழைநீர் சேகரிப்பின் அவசியம் மற்றும் அதன் பயன்கள் குறித்து எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.மழைநீரை முறையாக சேகரிப்பதன் மூலம் நிலத்தடி நீர்மட் டத்தை உயர்த்த முடியும் என்றும், இதன் மூலம் மாநகராட்சிப் பகுதிகளில் எதிர் காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்ப டுவதைத் தவிர்க்க முடியும் என்றும் விளக்கினர்.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து வணிகக் கட்டடங்கள் மற் றும் வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை முறையாக அமைத்து, பராமரித்து மழைநீரைச் சேகரிக்க வேண் டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத் தினர்.



தஞ்சை மாநகராட்சி பகுதி வணிக கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாக அமைக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பிரசுரங்களை ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி, மேயர் (பொ) அஞ்சுகம் ஆகியோர் வழங்கினர்.

மாநில ரோலர் ஸ்கேட்டிங் பாஸ்கெட் பால் போட்டி

பேராவூரணி, நவ. 22–

பேராவூரணி அருகே புனல்வாசல் டான் பாஸ்கோ மெட்ரிக். மேல் நிலைப்பள்ளியில் தமிழ் நாடு மாநில ரோலர் ஸ்கேட்டிங் பாஸ்கெட் பால் சங்கம் சார்பில் தேசிய அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் பாஸ் கெட் பால் அணிக்கு வீரர்களை தேர்வு செய்வ தற்கான மாநில அளவி லான போட்டி தொடங் கியது.

பள்ளி தாளாளர் சேவி யர் ரோலர் ஸ்கேட்டிங் பாஸ்கெட் பால் போட் டியை தொடங்கி வைத் தார். மாநில செயலாளர் பூஞ்சோலை, மாவட்ட செயலாளர் ஸ்ரீநாத் ஆகி யோர் முன்னிலை வகித் தனர். திருச்சி, கோவை, தேனி, தஞ்சாவூர், சென்னை, விழுப்புரம், திருவாரூர், மதுரை, நாகப் பட்டினம், சிவகங்கை உள்ளிட்ட 20 மாவட்டங் களைச் சேர்ந்த 30க்கும் அதிகமான அணிகள் இந் தப் போட்டியில் பங்கேற் கின்றன. 11 வயதுக்கு உட்பட்டோர், 14 வய துக்கு உட்பட்டோர், 17 வயதுக்கு உட்பட்டோர் என மூன்று பிரிவுகளில் போட்டிகள் நடைபெறு கின்றன. ஒவ்வொரு அணி யிலும் தலா 6 வீரர்கள் விளையாடுகின்றனர்.

இப் போட் டி யில் வெற்றி பெறும் அணிக ளுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்க ளும், சுழற்கோப்பைகளும் பரிசாக வழங்கப்படுகின் றன. மாநில அளவிலான போட்டியில் சிறப்பாக விளையாடும் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு 2027ம் ஆண்டு ஜனவரி மாதம் ராஜஸ்தான் மாநி லம் ஜெய்ப்பூரில் நடை பெற உள்ள தேசிய அள விலான போட்டியில் பங்கேற்க அனுப்பப்பட உள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.



பேராவூரணி அருகே புனல்வாசல் டான்பாஸ்கோ மெட்ரிக். பள்ளியில் நடந்த மாநில அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் பாஸ்கெட் பால் போட்டியில் பங்கேற்ற மாணவர்கள்.

மின் கம்பிகளில் படர்ந்துள்ள செடி, கொடிகளை அகற்ற கோரிக்கை

பேராவூரணி, நவ. 22–

பேராவூரணி அருகே கொன்றைக்காடு கிராமத்தில் மின் கம்பிகளில் செடி, கொடிகள் படர்ந்து உள்ளதை அகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.கொன்றைக்காடு ஆற்றுப்பாலம் ஊரணிக் கரை அருகிலும், கொன்றைக்காடு அரசு உயர்நிலைப் பள்ளி அருகிலும் மின் கம்பங்கள், மின்கம்பிகளில் செடி, கொடிகள் படர்ந்து காணப்படுகிறது. மழைக் காலத்தில் பலமாக காற்று வீசும் போதும், மழை பெய்யும்போதும் செடி, கொடிகளின் மீது மின் கம் பிகள் உரசி மின் தடை ஏற்படுவதுடன், தீ விபத்து ஏற்படும் அபாயமும் உள்ளது. மேலும், அவ்வழியாக செல்லும் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது.எனவே தமிழ்நாடு மின் வாரியம் உடனடி யாக நடவடிக்கை எடுத்து மின் கம்பிகளில் படர்ந் துள்ள செடி, கொடிகளை அகற்றி சீரமைக்க வேண் டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



பேராவூரணி அருகே கொன்றைக்காடு கிராமத்தில் மின் கம்பிகளில் செடி, கொடிகள் படர்ந்துள்ளது.

டீசல் மானியத்தை 3,500 லிட்டராக உயர்த்தணும் விசைப்படகு மீனவர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தல்

பேராவூரணி, நவ. 22–

பேராவூரணிஅருகே மல்லிப்பட்டி னத்தில் தமிழ்நாடு அனைத்து விசைப் படகு மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங் களின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. தமிழ்நாடு மீனவர் பேரவை பொருப் செயலாளர் தாஜுதீன் தலைமை வகித் தார். ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ராமேஸ்வரம் சேசுராஜா, எமிரேட், சகா யம், பாம்பன் அவிலா, பாக்யம், மண் டபம் தூத்ரியாஸ், கனிஸ்டன், சோழி யக்குடி கோபி, சாமிசுந்தரம், லாஞ்சியடி தொண்டி செல்வம், செல்வராஜ், கோட் டைப்பட்டினம் முகமது கான், முகமது மரைக்காயர், ஜெகதாப்பட்டினம் மருது, செல்வம், சேதுபாவாசத்திரம் ராஜ மாணிக்கம், செல்வக்கிளி, மல்லிப்பட் டினம் இளங்கோ, சேதுபதி, இப்ராகிம், ஜமால்முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை, புதுக்கோட்டை, ராமநாத புரம் மாவட்டங்களில் வாரத்தில் சனிக் கிழமை, திங்கள்கிழமை, புதன்கிழமை ஆகிய 3 நாட்கள் மட்டுமே விசைப்படகு மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது. முதல் நாள் கடலுக்குச் சென்று 24 மணி நேரத்துக்குள் மறுநாள் காலையில் கரை திரும்பும் நடைமுறை உள்ளது. இந் நிலையில் சிறிய அளவில் காற்று வீசி னாலும், மழை பெய்தாலும், வேறு பகுதிகளில் உருவாகும் காற்றழுத்தத் தாழ்வு நிலையை காரணம் காட்டியும் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்படுகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.

எனவே மீன்பிடித் தொழிலை அடிக் கடி முடக்கும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். இயற்கைச் சீற்றங் களைக் காரணம் காட்டி மீன்பிடித் தொழில் நிறுத்தப்படுவதால் ஏராளமான மீனவக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கின்றன. மீன்பிடிக்கத் தடை விதிக் கப்படும் நாட்களில் மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு படகு ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். தேர்தல் அறிக்கையில் முதல்வர் அறிவித்தபடி விசைப்படகு மீனவர்களுக்கு வழங்கப் படும் டீசல் மானியத்தை 3,500 லிட்ட ராக உயர்த்தி உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாமகவினர் மறியல் போராட்டம்

ஆடுதுறை, நவ.22-

பாமகவின் அங்கமாக இருக்கும் உழவர் பேரி யக்க மாநில தலைவர் ஆலயமணியின் பிறந்த நாளை முன்னிட்டு அவ ருக்கு வாழ்த்து தெரிவிக் கும் வகையில் அவரது சொந்த ஊரான பந்தநல் லூர் அருகே காமாட்சிபு ரம் கடைவீதியில் உள்ள வாட்டர் டேங்கர் சுவரில் டிஜிட்டல் பேனர் ஒட்டப் பட்டிருந்தது.

இந்நிலையில் மர்ம நபர்கள் அந்த பிறந்தநாள் பேனரில் மாட்டு சாணத்தை வீசி சென்றுள் ளது தெரியவந்தது. இதனை கண்டித்து பாமக, வன்னியர் சங்கம், உழவர் பேரியக்கம் உள்ளிட்ட இயக்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் காமாட்சி புரம் கடை வீதியில் சாலை மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர். .இந்த சம்பவத்தில் ஈடு பட்டவர்களை உடனடி யாக கைது செய்ய வேண் டும் என மறியல் போராட்டத்தில் ஈடுபட் டவர்கள் கோஷம் எழுப் பினர். பந்தநல்லூர் அணைக்கரை சாலையில் டிராக்டர்களை குறுக்கே நிறுத்தி நடந்த மறியல் போராட்டத்தால் அப்பகு தியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. போலீ சார் பேச்சு வார்த்தை நடத்தி உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்ததால் மறி யலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

ஆட்கள் தேவை

ஹார்டுவேர்ஸ் மற்றும் பெயிண்ட் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு உடனடி ஆட்கள் தேவை.

விற்பனையாளர்

கல்வித் தகுதி பட்டப்படிப்பு (அல்லது) டிப்ளமோ

மாத சம்பளம்:

Rs.15,000/- முதல் Rs.18,000/- வரை

தஞ்சை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்டவர்கள் மட்டும்

74/2, ஆபிரகாம் பண்டிதர் ரோடு, தஞ்சாவூர்.

செல்: 99943 88807

வங்கி ஆஃப் பரோடா Bank of Baroda

கும்பகோணம் கிளை

S.K. டவர், நெ. 5A, நாகேஸ்வரன் சன்னதி தெரு, கும்பகோணம் - 612 001.

போன் : 0435-2427127/2427167

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : திரு. G. இளையதேவன், த/பெ. C.கணேசன், நெ. 6, 2வது மாடி, சிந்து அப்பார்மெண்ட், புஷ்பா காலனி, கங்கா தெரு, சாலிகிராமம், சென்னை - 600 093. மற்றும் திருமதி. E. காந்தி, க/பெ. G.இளையதேவன், நெ. 6, 2வது மாடி, சிந்து அப்பார்மெண்ட், புஷ்பா காலனி, கங்கா தெரு, சாலிகிராமம், சென்னை - 600 093.

Term Loan A/c.No.**26504060006747,** நிலுவை தொகை ரூ.**14,16,495.67/-** மேலும் **20.11.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

திருவாரூர் மாவட்டம், கும்பகோணம் பதிவு மாவட்டம், வலங்கைமான் சார்பதிவு அலுவலகம், வலங்கைமான் வட்டம், கிளியூர் கிராமத்தில் நெ. 29/1ல் உள்ள குடியிருப்பு வீடு உட்பட. **சொத்து 1:** ரீசர்வே நெ. 541/7ல் உள்ள 13 ஏர்ஸ் பரப்பளவுள்ள புஞ்சை நிலம். **சொத்து 2:** ரீசர்வே நெ. 541/8ல் உள்ள 16 ஏர்ஸ் பரப்பளவுள்ள புஞ்சை நிலம். நான்கு எல்லைகள்: மகளிர் வளாகத்திற்கு கிழக்கு, மாகாளியம்மன் கோவிலுக்கு மேற்கு, திரு. அரிகிருஷ்ணன் நஞ்சைக்கு தெற்கு, கீழத் தெருவிற்கு வடக்கு, அடமானம் வைக்கப்பட்ட சொத்து திரு. G.இளையதேவன், த/பெ. C.கணேசன் பெயரில் உள்ளது. சுவாதீன நிலை: ஆக்கப்பூர்வமான

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 65,10,000/-	டேவணித் தொகை	ரூ. 6,51,000/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் **23.12.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 15.12.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)

டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 23.12.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏதாரார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி போன் :0435-2427127, செல்: 8838657833 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 21.11.2026
இடம் : கும்பகோணம்

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா

